# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## வணிகக் கப்பற்றொழில் (திருத்தம்)

***1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் 2019, ஓகத்து மாதம் 01 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, யூலை மாதம் 01 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ ***290 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 56.00** **தபாற் செலவு : ரூபா 35.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 138 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, கடலில் உயிர்காப்பின்மீதான சர்வதேசச் சமவாயத்தையும், 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தையும் ஏற்புடையனவாக்குவதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பாகத்தின் குறிக்கோள்களுக்குப் பயன்கொடுப்பதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கும் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதற்கும் அமைச்சரை இயலச்செய்வதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 143 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பயணிக் கப்பல்கள் விதித்துரைக்கப் படக்கூடியவாறான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதற்கு ஏற்பாடுசெய்வதும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 144 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சரக்குக் கப்பல் விதித்துரைக்கப் படக்கூடியவாறான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதற்கு ஏற்பாடு செய்வதும் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 152 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 8** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 156 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, கப்பலின் நிலையுறுதி தொடர்பான தகவல்களை வழங்குவதும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 10** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தினால் திரிபுபடுத்தப்பட்டவாறான 1966 ஆம் ஆண்டின் சுமைவரைகளின்மீதான சர்வதேசச் சமவாயத்தை ஏற்புடையதாக்குவதாகும்.

***வாசகம் 12*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அடிகளை மீற்றர்களாக மாற்றுவதாகும்.

***வாசகம் 13*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம், 162 ஆம் பிரிவுகளை மாற்றீடுசெய்வதுடன் மாற்றீடுசெய்யப்பட்டவாறான அப்பிரிவுகளின் சட்டப்பயனானது, "சர்வதேசக் கடற்பயணம்" மற்றும் "புதிய கப்பல்" என்னும் சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணங்களை ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 14*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 164 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குறித்தசில கருமங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கும் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தொகையை அதிகரிப்பதற்கும் அமைச்சரை இயலச்செய்வதாகும்.

***வாசகம் 15*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 166 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 16*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தையும் மேலதிகக் குற்றப்பணத்தையும் முறையே மூன்று மில்லியன் ரூபாவை மற்றும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்கு அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 17*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 168 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 18*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 11 ஆம் வாசகத்தினாற் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 19*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 171 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 20*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 172 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 21*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 173 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 11 ஆம் வாசகத்தினாற் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 22*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 174 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 23*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 175 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குற்றப்பணத்தையும் மேலதிகக் குற்றப்பணத்தையும் முறையே ஒரு மில்லியன் ரூபாவை மற்றும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்கு அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 24** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 205 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்துக்கு மேலதிகமாக ஏதேனும் இடத்தை உள்ளடக்குவதும் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றுக்குக் குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

**வாசகம் 25** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 207 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குறித்தசில நிபந்தனைகளுக்காகக் காப்பற்ற கப்பல்களைத் தடுத்துவைப்பதுமாகும்.

**வாசகம் 26** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான பாகம் VIIஅ என்பதை உட்புகுத்துவதுடன் உட்புகுத்தப்பட்டவாறான அப்பாகத்தின் சட்டப்பயனானது, 1978 ஆம் ஆண்டின் வரைவாவணத்தினாலும் 1997 ஆம் ஆண்டின் வரைவாவணத்தினாலும் திரிபுபடுத்தப்பட்டவாறாக 1973 ஆம் ஆண்டின் கப்பல்களிலிருந்து தீழ்ப்பைத் தடுப்பதற்கான சர்வதேசச் சமவாயத்தின் நியதிகளின்படி கப்பல்களிலிருந்து தீழ்ப்பைத் தடுப்பதுமாகும்.

**வாசகம் 27** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 321அ, 321ஆ, 321இ மற்றும் 321ஈ என்னும் பிரிவுகளை உட்புகுத்துவதுடன் உட்புகுத்தப்பட்டவாறான அப்பிரிவுகளின் சட்டப்பயனானது-

(அ) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி, சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட ஏதேனும் சமவாயத்தின் குறைந்தபட்ச நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான நடைமுறைப்படுத்துகின்ற நியமங்களை வழங்கக்கூடியவராகவிருப்பதற்கு ஏற்பாடு செய்வதுமாகும்;

(ஆ) தண்டத்தை விதித்து அறவிடுவதுமாகும்; அத்துடன்

(இ) நிபுணர்கள் குழாமொன்றை நியமிப்பதுமாகும்.

**வாசகம் 28** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 323அ என்னும் பிரிவை உட்புகுத்துவதுடன் உட்புகுத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, குறித்தசில கப்பல்களுக்கு ஒழுங்குவிதிகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிப்பதற்கு வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதிக்குத் தத்துவமளிப்பதுமாகும்.

**வாசகம் 29** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 330 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன் மாற்றீடுசெய்யப்பட்டவாறான அப்பிரிவுகளின் சட்டப்பயனானது, காப்பு, சுமைவரை, தொன்னிறை அளவீடு மற்றும் கப்பல்களிலிருந்து தீழ்ப்பைத் தடுத்தல் தொடர்பான சமவாயங்களின் ஏற்பாடுகளை, திரிபுபடுத்தல்களுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாகக் கருதுவதுமாகும்.

**வணிகக் கப்பற்றொழில்**
**(திருத்தம்)**

*ச.வ.-ஓ. 31/2015*

### 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

***1***. இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தின் 138 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2***. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 138 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "சான்றிதழ்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

" "சான்றிதழ்" என்பது, சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, விடயத்துக்கேற்ப, 143(1)(ஆ), 144(1)(ஆ) மற்றும் 144(2)(ஆ) என்னும் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான தோதான சான்றிதழ் என்று பொருளாகும்;

சட்டக்கோவை" என்பது, சமவாயத்தின் கீழ் உத்தர விடுகின்றதாக்கப்பட்டதானவொரு சாதனம் என்று பொருளாகும்;";

(2) ''சமவாயம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

'' ''சமவாயம்'' என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயம், 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம் மற்றும் அத்தகைய வரைவாவணத்திற்கு செய்யப்படும் ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தம் என்று பொருளாகும்;'';

(3) ''சமவாயம் எந்த நாட்டுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த நாடு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

'' ''சமவாயம் எந்த நாட்டுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த நாடு'' என்பது, எந்த நாடு சமவாயத்துக்கான ஒப்பந்தம்செய்கின்ற அரசாங்கமாகவுள்ளதோ அந்த ஒரு நாடு என்று பொருளாகும்;'';

(4) ''சர்வதேசப் பயணம்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

'' ''சர்வதேசப் பயணம்'' என்பது,-

(அ) இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும் மற்றும் இலங்கைக்கு வெளியேயுள்ள ஒரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும்; அல்லது

(ஆ) சமவாயம் (இலங்கை தவிர்ந்த) எந்த நாட்டுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஒரு நாட்டிலுள்ள ஒரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும் மற்றும் இலங்கைக்கு வெளியேயுள்ள வேறேதேனும் நாட்டில் அல்லது ஆள்புலத்தில் உள்ள ஒரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும்,

இடையேயான ஒரு பயணம் என்று பொருளாகும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

''(1) இப்பாகத்தின் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும் பயன்கொடுப்பதற்கும் அவற்றை மேலும் சிறந்தமுறையில் நிறைவேற்றுவதற்கும் கடலில் உயிர்காப்புக்காகவும் சமவாயத்தையும், சட்டக் கோவைகளையும், அவற்றுக்கான எவையேனும் பின்னிணைப்புகளையும் மற்றும் அத்தகைய சமவாயம், சட்டக்கோவைகள், பின்னிணைப்புகள் என்பவற்றின் திருத்தங்களுக்காகவும் அல்லது மாற்றீடுகளுக்காகவும் சமவாயம் எந்தக் கப்பல்களுக்கு ஏற்புடையதாக இராதுள்ளதோ அந்தக் கப்பல்களுக்காகவும் பொதுவாக ஏற்பாடுசெய்வதற்கு அவசியமானவையென அல்லது அல்லது அவற்றுக்கு உசிதமானவையென அல்லது பயன்கொடுப்பவையென அமைச்சர் கருதுகின்றவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளை அவர் ஆக்கலாம் என்பதுடன் அத்தகைய தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வருவனவற்றுக்காக ஏற்பாடுசெய்கின்ற ஒழுங்குவிதிகளையும் ஆக்கலாம்:-

(அ) கப்பல்களைச் சோதனையிடுதலும் ஆய்வு செய்தலும், கப்பல்களின் உயிர்காப்புத் துணைப் பொருட்களினதும் வேறு சாதனங்களினதும்

ஆய்வுகளைச் செய்தலும், கப்பல்களின் வானொலி நிறுவுகையின் ஆய்வுகளைச் செய்தலும், கப்பல்களின் கட்டமைப்பு, எந்திரத்தொகுதி, சாதனங்கள் மற்றும் வேறு நிறுவுகைகளின் ஆய்வுகளைச் செய்தலும்;

(ஆ) ஆய்வின் பின்னர் நிலைமையைப் பேணுதல்;

(இ) சான்றிதழ்களை வழங்குதல் அல்லது புறக் குறிப்பிடுதல் மற்றும் அவை கிடைக்கக்கூடியமை, அவற்றின் ஏற்றுக்கொள்கை அத்துடன் தகைமை;

(ஈ) சான்றிதழ்களின் படிவங்களும் சாதனங்களின் பதிவேடுகளும்;

(உ) இலங்கையினால் அல்லது சமவாயம் எந்த நாடுகளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த நாடுகளினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் காலநீட்சியும் செல்லுபடியானதன்மையும்;

(ஊ) இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கும்போது கப்பல்களின் கட்டுப்பாடு;

(எ) கடல்சார் இழப்புப்புள்ளி விபரங்களும் கடல்சார் சம்பவங்களும் பற்றிய காப்பின் நுண்ணாய்வு;

(ஏ) கப்பல்களினதும் அவற்றின் சாதனங்கள், எந்திரத்தொகுதி மற்றும் மின்சார நிறுவுகைகளினதும் நிர்மாணக் – கட்டமைப்பு, உட்பிரிவிடுகை மற்றும் நிலையுறுதி, பயணி மற்றும் சரக்குக் கப்பல்களில் தீ பாதுகாப்பு, தீ கண்டுபிடிப்பு மற்றும் தீயணைப்பு, அத்தகைய கப்பல்களில் எடுக்கப்படவேண்டிய பொதுவான தீ முற்காப்புகள் அத்துடன் பயணிக் கப்பல்களுக் கான விசேட தீ காப்பு வழிமுறைகள்;

(ஐ) உயிர் காப்புத் துணைப்பொருட்களும் ஒழுங்கேற்பாடுகளும்;

(ஒ) வானொலித் தொடர்பாடல்கள்;

(ஓ) நீர்ப் போக்குவரத்து காப்பு;

(ஔ) சரக்குகளையும் எண்ணெய் எரிபொருட்களையும் ஏற்றிச்செல்லுதல்;

(க) அபாயகரமான பண்டங்களை ஏற்றிச்செல்லுதல்;

(ங) அணுக் கப்பல்கள்;

(ச) கப்பல்களின் காப்பான தொழிற்பாட்டை முகாமைசெய்தல்;

(ஞ) அதிவேக மரக்கலங்களுக்கான காப்பு வழிமுறைகள்;

(ட) கடலோரக் காப்பை அதிகரிப்பதற்கான விசேட வழிமுறைகள்;

(ண) கடலோரப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான விசேட வழிமுறைகள்;

(த) தொகையாக ஏற்றிச்செல்லும் கப்பல்களுக்கான மேலதிகக் காப்பு வழிமுறைகள்;

(ந) முனைவு நீர்ப்பரப்புகளில் தொழிற்படுகின்ற கப்பல்களுக்கான காப்பு வழிமுறைகள்;

(ப) இணங்கியொழுகுகின்றமையைச் சரிபார்த்தல்;

(ம) இப்பாகத்தின் கீழ் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய வேறு கருமங்கள்;

(ய) சமவாயத்தின், சட்டக்கோவைகளின் மற்றும் அவற்றுக்கான ஏதேனும் பின்னிணைப்பின் ஏற்பாடுகளுக்கு மற்றும் அத்தகைய சமவாயத்தின், சட்டக்கோவைகளின் அத்துடன் பின்னிணைப்புகளின் எவையேனும் திருத்தங்களுக்குப் பொதுவாகப் பயன் கொடுப்பதற்கான வேறேதேனும் கருமங்கள்.";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 143 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 143 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(1) (அ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட சமவாயச் சான்றிதழ்கள் வலுவிலிருந்தாலொழிய, பயணிக் கப்பலொன்று இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்துக்கு அல்லது இடத்துக்கு அல்லது அதிலிருந்து பயணமொன்றின் மீது கடலுக்குச் செல்லுதலாகாது அல்லது இலங்கைப் பயணிக் கப்பலொன்று சர்வதேசப் பயணமொன்றை மேற்கொள்ளுதலாகாது.

(ஆ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான சான்றிதழ்கள் வலுவிலிருந்தாலொழிய, பயணிக் கப்பலொன்று இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து இலங்கையிலுள்ள அத்தகைய இன்னுமொரு துறைமுகத்துக்கு அல்லது இடத்துக்குப் பயணமொன்றை மேற்கொள்ளுதலாகாது.";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 144 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 144 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

''(1) (அ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான சமவாயச் சான்றிதழ்கள் வலுவிலிருந்தாலொழிய, எச்சரக்குக் கப்பலுக்குச் சமவாயம் ஏற்புடையதாகின்றதோ அச்சரக்குக் கப்பலொன்று இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்துக்கு அல்லது இடத்துக்கு அல்லது அதிலிருந்து பயணமொன்றின் மீது கடலுக்குச் செல்லுதலாகாது அல்லது எந்த இலங்கைச் சரக்குக் கப்பலுக்குச் சமவாயம் ஏற்புடையதாகின்றதோ அந்த இலங்கைச் சரக்குக் கப்பலொன்று சர்வதேசப் பயணமொன்றை மேற்கொள்ளுதலாகாது.

(ஆ) ஐந்நூறு அல்லது அதற்கு மேற்பட்ட முழுமொத்தத் தொன்களைக் கொண்ட சரக்குக் கப்பல் ஒன்று, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான சான்றிதழ்கள் வலுவிலிருந்தாலொழிய, இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து இலங்கையிலுள்ள அத்தகைய இன்னுமொரு துறைமுகத்துக்கு அல்லது இடத்துக்குப் பயணமொன்றை மேற்கொள்ளுதலாகாது.

(2) (அ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான செல்லுபடியான சான்றிதழ்கள் மற்றும் வெளிநாட்டுக் கப்பல்களின் விடயத்தில், வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறான அத்தகைய சமமான சான்றிதழ்கள் வலுவிலிருந்தாலொழிய, எந்தச் சரக்குக் கப்பலுக்குச் சமவாயம் ஏற்புடையதாகாதுள்ளதோ அந்தச் சரக்குக் கப்பல், இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்துக்கு அல்லது இடத்துக்கு அல்லது அதிலிருந்து ஒரு பயணத்தின் மீது கடலுக்குச் செல்லுதலாகாது அல்லது சமவாயம் எந்த இலங்கைச் சரக்குக் கப்பலுக்கு ஏற்புடையதாகாதுள்ளதோ அந்த இலங்கைச் சரக்குக் கப்பல் ஒரு சர்வதேசப் பயணத்தை மேற்கொள்ளுதலாகாது.

(ஆ) ஐந்நூறு முழுமொத்தத் தொன்களுக்குக் குறைவான சரக்குக் கப்பலொன்று, ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான சான்றிதழ்கள் வலுவிலிருந்தாலொழிய, இலங்கையிலுள்ள துறைமுகமொன்றிலிருந்து அல்லது இடத்திலிருந்து இலங்கையிலுள்ள அத்தகைய இன்னுமொரு துறைமுகத்துக்கு அல்லது இடத்துக்குப் பயணமொன்றை மேற்கொள்ளுதலாகாது.";

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில், "ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 152 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 152 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவு, "மூவாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 156 ஆம் பிரிவு, "மூவாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 156 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(1) வேறுபடுகின்ற சேவை நிலைமைகளின்கீழ் கப்பலின் நிலையுறுதிபற்றிச் செம்மையான வழிகாட்டுகைக்காக அவசியமானவாறாக ஒவ்வொரு கப்பலுக்கும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்கள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டும்.";

(2) அதன் (4) ஆம் உட்பிரிவில், ''ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவு, "சமவாயச் சான்றிதழ்'', ''1966 ஆம் ஆண்டின் சமவாயம்'' மற்றும் ''சமவாய நாடு'' என்னும் சொல்லமைப்புகளின் வரைவிலக்கணங்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது:-"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

''சமவாயம்'' என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தினால் திரிபுபடுத்தப்பட்டவாறான 1966 ஆம் ஆண்டின் சுமைவரைகளின் மீதான சர்வதேசச் சமவாயம் மற்றும் அத்தகைய வரைவாவணத்திற்கு செய்யப்படும் ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தம் என்று பொருளாகும்;

''சமவாயச் சான்றிதழ்'' என்பது, சமவாயத்துக்கிணங்க வழங்கப்பட்டவொரு சான்றிதழ் என்று பொருளாகும்;

''சமவாய நாடு'' என்பது, எந்த நாடு சமவாயத்துக்கான ஒப்பந்தம்செய்கின்ற அரசாங்கமொன்றாகவுள்ளதோ அந்த ஒரு நாடு என்று பொருளாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவு, அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஆ) நீளத்தில் 24 மீற்றர்களுக்கு குறைவான புதிய கப்பல்கள்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம், 162 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம், 162 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவன இடப்படுகின்றன:-

*"சர்வதேசப் பயணம்" என்பதன் வரைவிலக்கணம்.*

161. இப்பாகத்தில் "சர்வதேசப் பயணம்" என்பது-

(அ) இலங்கையிலுள்ளவொரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும் மற்றும் இலங்கைக்கு வெளியேயுள்ளவொரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும்; அல்லது

(ஆ) சமவாயம் எந்த நாட்டுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த நாட்டிலுள்ள (இலங்கை தவிர) ஒரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும் மற்றும் இலங்கைக்கு வெளியேயுள்ள வேறேதேனும் நாட்டிலுள்ள அல்லது ஆள் புலத்திலுள்ளவொரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும்,

இடையேயான ஒரு சர்வதேசப் பயணம் என்று பொருளாகும்:

ஆயின், எவ்வாறாயினும், எந்தத் துறைமுகங்களுக்கிடையே பயணமொன்று மேற்கொள்ளப்படுகின்றதோ அந்தத் துறைமுகங்களைத் தீர்மானிப்பதில், காலநிலையின் அத்தகைய அழுத்தம்

காரணமாக அல்லது கப்பற்றலைவர் அல்லது கப்பலின் சொந்தக்காரர் அல்லது கப்பலை வாடகைக்கெடுப்போர் (எவரேனுமிருப்பின்) தடுத்திருக்கக்கூடிய அல்லது முன்னரே நிறுத்தியிருக்கக்கூடிய அத்தகைய வேறு சூழ்நிலை காரணமாக மட்டும் கப்பலொன்று அதன் உட்கருதப்பட்ட பயணத்தைத் திசை திருப்பியமை எதுவும் கருத்திற்கெடுக்கப் படலாகாது.

"புதிய கப்பல்" என்பதன் வரைவிலக்கணம்.

162. இப்பாகத்தில் "புதிய கப்பல்" என்பது,-

(அ) எந்த நாடு சமவாய நாடொன்றாகவுள்ளதோ அந்த நாட்டில் (இலங்கை தவிர) பதிவு செய்யப்பட்ட அல்லது அதன் கொடியைப் பறக்கவிடுகின்ற கப்பலொன்றின் விடயத்தில், எத்தேதியிலிருந்து தற்போதைய சமவாயம் வலுவுக்கு வருகின்றதோ அத்தேதியன்று அல்லது அதன் பின்னர்; அத்துடன்

(ஆ) வேறேதேனும் கப்பலின் விடயத்தில், 1972, சனவரி 25 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர்,

எந்தக் கப்பலின் அடிக்கட்டை இடப்படுகின்றதோ அல்லது எந்தக் கப்பல் நிர்மாணத்தின் ஒத்த கட்டத்திலுள்ளதோ அந்தக் கப்பல் என்று பொருளாகும்.".

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 164 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 164 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில்–

(அ) "1966 ஆம் ஆண்டின் சமவாயம்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "சமவாயம்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஏ), (ஐ) மற்றும் (ஒ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:–

"(ஏ) இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்திலுள்ள போது கப்பல்களைக் கட்டுப்படுத்துதல்;

(ஐ) கடல்சார் இழப்புப்புள்ளி விபரங்களும் கடல்சார் சம்பவங்களும் பற்றிய காப்பு நுண்ணாய்வு;

(ஒ) சான்றிதழ்களின் படிவங்கள்;

(ஓ) இணங்கியொழுகுகின்றமையைச் சரிபார்த்தல்;

(ஔ) வலயங்கள், இடப்பரப்புகள் மற்றும் பருவகாலக் காலப்பகுதிகள்;

(க) பழுதுபார்த்தல்களும், மாற்றங்களும், திரிபுபடுத்தல்களும்;

(ங) ஆய்வின்பின்னர் நிலைமையைப் பேணுதல்;

(ச) இலங்கை அரசாங்கம் தவிர, அரசாங்கங்களினால் சமவாயத்தின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் செல்லுபடியானதன்மை;

(ஞ) இப்பாகத்தின்கீழ் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய வேறு கருமங்கள்; அத்துடன்

(ட) பொதுவாகச் சமவாயத்துக்கும் அத்தகைய சமவாயத்தின் எவையேனும் திருத்தங்களுக்கும் பயன்கொடுப்பதற்கான ஏதேனும் வேறு கருமங்கள்.".

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 166 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 166 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் நீதிமன்றம் விதிப்பதற்கு பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான (சுமைவரையானது எந்தப் பூரணமான சென்ரிமீற்றரின்மூலம் அமிழ்ந்து போகின்றதோ அந்த ஒவ்வொரு பூரணமான சென்ரிமீற்றருக்குமாகப் பத்து ரூபாவை விஞ்சாத) மேலதிகக் குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத

குற்றப்பணமொன்றுக்கும் நீதிமன்றம் விதிப்பதற்கு பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான (சுமைவரையானது எந்தப் பூரணமான சென்ரிமீற்றரின்மூலம் அமிழ்ந்து போகின்றதோ அந்த ஒவ்வொரு பூரணமான சென்ரிமீற்றருக்குமாக ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத, மேலதிகக் குற்றப்பணமொன்றுக்கும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 168 ஆம் பிரிவு, ''இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 168 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''சர்வதேசச் சுமைவரைச் சான்றிதழ் (1966);'', என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''சர்வதேசச் சுமைவரைச் சான்றிதழ்;'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 171 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில், ''இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 171 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**20**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 172 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், ''ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 172 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 173 ஆம் பிரிவு, ''சர்வதேசச் சுமைவரைச் சான்றிதழ் (1966);'', என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''சர்வதேசச் சுமைவரைச் சான்றிதழ்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 173 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 174 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில், "இருநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 174 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 175 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் நீதிமன்றம் விதிப்பதற்கு பொருத்தமானதெனக் கருதக் கூடியவாறான (சுமைவரையானது எந்தப் பூரணமான சென்ரிமீற்றரின்மூலம் அமிழ்ந்து போகின்றதோ அந்த ஒவ்வொரு பூரணமான சென்ரிமீற்றருக்குமாகப் பத்து ரூபாவை விஞ்சாத) மேலதிகக் குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும் நீதிமன்றம் விதிப்பதற்கு பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான (சுமைவரையானது எந்தப் பூரணமான சென்ரிமீற்றரின்மூலம் அமிழ்ந்து போகின்றதோ அந்த ஒவ்வொரு பூரணமான சென்ரிமீற்றருக்குமாக ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத) மேலதிகக் குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 175 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 205 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 205 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகம் அல்லது இடம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகம் அல்லது இடம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில், ''மூவாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 207 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**25**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 207 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(1) இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் உள்ளதான ஏதேனும் கப்பல், காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்படுமிடத்து, அதாவது, அத்தகைய கப்பலின் உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி என்பவற்றின் குறைபாடுடைய நிலைமை, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றுகை அல்லது முறையற்ற சுமையேற்றுகை காரணமாக அல்லது இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறாகச் சமவாயங்களுடன் ஒத்ததாகவிராத வேறேதேனும் நிபந்தனைகாரணமாக, அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரிய சேதம் விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பலானது ஆய்வுசெய்யும் அல்லது குறைபாடுடைய நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாமென்பதுடன் 208 ஆம் பிரிவின்கீழ் ஒன்றில் இறுதியாகத் தடுத்துவைக்கவும்படலாம் அல்லது விடுவிக்கவும்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் VII அ என்னும் பாகத்தை உட்புகுத்துதல்.

**26**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VII என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் பாகம் VIIஅ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பாகம் VII அ

## கப்பல்களிலிருந்தான தீழ்ப்பைத் தடுத்தல்

### அத்தியாயம் 1

### முதனிலையானவை

பொருள்கோடல்.

215அ. இப்பாகத்தில்–

"சான்றிதழ்" என்பது, சமவாயத்துக் கிணங்க வழங்கப்பட்டவொரு சான்றிதழ் என்று பொருளாகும்;

"சமவாயம்" என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் வரைவாவணங்கள் மற்றும் 1997 ஆம் ஆண்டின் வரைவாவணங்களின் மூலம் திரிபுபடுத்தப்பட்டவாறான 1973 ஆம் ஆண்டின் கப்பல் களிலிருந்தான தீழ்ப்பைத் தடுப்பதற்கான சர்வதேசச் சமவாயம் என்று பொருளாகும்;

"சமவாயம் எந்த நாட்டுக்கு ஏற்புடைய தாகின்றதோ அந்த நாடு" என்பது, சமவாயத்துக்கான ஒப்பந்தம் செய்கின்ற அரசாங்கமாகவுள்ள வொரு நாடு என்று பொருளாகும்;

"சர்வதேச பயணம்" என்பது,-

(அ) இலங்கையிலுள்ள ஒரு துறை முகத்துக்கும் அல்லது இடத்துக்கும் மற்றும்இலங்கைக்குவெளியேயுள்ள ஒரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும்; அல்லது

(ஆ) சமவாயம் (இலங்கை தவிர்ந்த) எந்த நாட்டுக்கு ஏற்புடைய தாகின்றதோ அந்த ஒரு

நாட்டிலுள்ள ஒரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும் மற்றும் இலங்கைக்கு வெளியேயுள்ள வேறேதேனும் நாட்டில் அல்லது ஆள்புலத்தில் உள்ள ஒரு துறைமுகத்துக்கும் அல்லது இடத்துக்கும்,

இடையேயான ஒரு பயணம் என்று பொருளாகும்; அத்துடன்

''கப்பல்'' என்பது, கடல்சார் சூழலில் தொழிற்படுகின்ற எத்தகையதான எவ்வகையினதுமானவொரு கலன் என்று பொருளாகும் என்பதுடன் நீர்வழிப் படகுகளையும், காற்றணை வாகனங்களையும், அமிழ்த்தப் படத்தக்கவையையும், மிதக்கும் மரக்கலங்களையும் மற்றும் நிலையான அல்லது மிதக்கும் மேடைகளையும் உள்ளடக்கும்.

ஒழுங்குவிதிகள். 215ஆ. அமைச்சர் பின்வருவன தொடர்பிலான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) சான்றிதழ்களை வழங்குதலும் மற்றும் சமவாயம் எந்த நாட்டுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஒரு நாட்டின் அதிகாரத்தின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்களை ஏற்றங்கீகரித்தலும் தொடர்பான ஏதேனும் கருமம்;

(ஆ) இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய சான்றிதழ்களின் படிவம்; அத்துடன்

(இ) இப்பாகத்தின்கீழ் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய வேறு கருமங்கள்.

## அத்தியாயம் 2

### சான்றிதழ்

இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழின்றிக் கப்பல்கள் கடலுக்குச் செல்லுதலைத் தடைசெய்தல்.

215இ. (1) இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழொன்று ஒரு கப்பல் தொடர்பில் வலுவில் இருந்தாலொழிய, அக்கப்பல் இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்துக்கு அல்லது இடத்துக்கு அல்லது அதிலிருந்து ஒரு பயணத்தின் மீது கடலுக்குச் செல்லுதலாகாது அல்லது ஏதேனும் இலங்கைக் கப்பல் சர்வதேச கடற்பயணமொன்றை புரிதலாகாது.

(2) ஏதேனும் கப்பல் (1) ஆம் உட்பிரிவை மீறிக் கடலுக்குச் சென்றால் அல்லது கடலுக்குச் செல்ல எத்தனித்தால், கப்பற் சொந்தக்காரர் அல்லது கப்பற்றலைவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் அதற்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

சமவாயம் திருத்தப்படுவதன்மீது சான்றிதழை வேறுபடுத்துதல்.

215ஈ. பிரிவு 215இ என்பதன் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழின் தன்மை சம்பந்தமாகச் சமவாயத்தின் எவையேனும் ஏற்பாடுகளின் ஏதேனும் திருத்தம் அல்லது மாற்றீடு செய்யப்படும் பட்சத்தில், அமைச்சர், கட்டளையின் மூலம், அத்தகைய கட்டளையின்மூலம் அமைச்சர் விதித்துரைக்கக்கூடியவாறாக, அவ்வாறு திருத்தப்பட்டவாறான சமவாயத்துக்குத் தோதானதாக அத்தகைய வேறு சான்றிதழுக்கான குறிப்பீடுகள் அதற்குப் பதிலாக

இடப்பட்டனவென்றாற்போன்று அத்தகைய உட்பிரிவு பயனுடையதாதல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

சான்றிதழைக் காண்பித்தல்.

215உ. ஒவ்வொரு கப்பலினதும் கப்பற்றலைவர், பயணத்துக்காகக் கப்பலின் விடுவிப்பொன்று கோரப்படும் நேரத்தில், அக்கப்பலானது கடலுக்குச் செல்லும்போது வலுவிலிருக்கவேண்டியதும் 215இ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டதுமான சான்றிதழை இயைபான அலுவலருக்குக் காண்பித்தல் வேண்டுமென்பதுடன், சொல்லப்பட்ட சான்றிதழ் அவ்வாறு காண்பிக்கப்படும்வரை விடுவிப்பொன்று வழங்கப்படுதலுமாகாது; அத்துடன் அக்கப்பலானது தடுத்துவைக்கவும்படலாம்.

ஆய்வு, பரிசோதனை அல்லது நுண்ணாய்வு.

215ஊ. (1) பிரிவு 215இ என்பதன் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழொன்றின் வழங்குகையைத் தேவைப்படுத்துகின்ற கப்பலொன்றின் சொந்தக்காரர், கப்பற்றலைவர் அல்லது முகவர், கப்பலின் நிலைமையும் அதன் சாதனங்களும் நல்லொழுங்கில் உள்ளனவென்ற பொருள்பட, அக்கப்பலானது ஆய்வுசெய்யப்படுவதற்காக, பரிசோதனை செய்யப்படுவதற்காக அல்லது நுண்ணாய்வு செய்யப்படுவதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) ஆய்வை, பரிசோதனையை அல்லது நுண்ணாய்வை நடாத்துகின்ற இயைபான அதிகாரி, கப்பலின் நிலைமையும் அதன் சாதனங்களும் நல்லொழுங்கில் உள்ளனவென அவர் திருப்திப்படின், ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டவொரு படிவத்தில் ஆய்வு, பரிசோதனை அல்லது நுண்ணாய்வு பற்றிய வெளிப்படுத்துகையைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(3) ஆய்வு, பரிசோதனை அல்லது நுண்ணாய்வு பற்றிய வெளிப்படுத்துகை, வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு இயைபான அதிகாரியினால் உடனடியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

சான்றிதழை வழங்குதல்.

215எ. பிரிவு 215ஊ என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட கப்பலொன்றின் ஆய்வு, பரிசோதனை அல்லது நுண்ணாய்வு பற்றிய வெளிப்படுத்துகை பெறப்பட்டதன்மேல், வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, இப்பாகத்தின் இயைபான ஏற்பாடுகளும் அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளும் இணங்கியொழுகப்பட்டுள்ளனவெனத் திருப்திப்படின், அத்தகைய சான்றிதழை அத்தகைய கப்பலுக்கு வழங்குதல்வேண்டும்.

சான்றிதழின் செல்லுபடிக் காலப்பகுதி.

215ஏ. சான்றிதழொன்று-

(அ) சான்றிதழிற் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு மேற்பட வலுவிலிருத்தலாகாது; அல்லது

(ஆ) வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, 215ஐ என்னும் பிரிவின்கீழ் சான்றிதழை இல்லாதாக்கியுள்ளாரென்று சொந்தக்காரருக்கு, கப்பற்றலைவருக்கு அல்லது முகவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளபின்னர், வலுவிலிருத்தலாகாது என்பது

டன் அத்தகைய பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் இடைநிறுத்துகைக் காலப் பகுதியின்போது வலுவிலிருத்தலுமாகாது.

சான்றிதழை இல்லாதாக்குதல் அல்லது இடைநிறுத்துதல்.

215ஐ. (1) வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, ஏதேனும் கப்பல் தொடர்பான சான்றிதழை–

(அ) அச்சான்றிதழானது எந்த ஆய்வின், பரிசோதனையின் அல்லது நுண்ணாய்வின் அடிப்படையில் இருந்ததோ அந்த ஆய்வு, பரிசோதனை அல்லது நுண்ணாய்வு பற்றிய ஏதேனும் வெளிப்படுத்துகை ஏதேனும் விபரத்தில் மோசடியான முறையில் அல்லது பிழையான முறையில் செய்யப்பட்டுள்ளது;

(ஆ) பொய்யான அல்லது பிழையான தகவல்களின்மீது அச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது; அல்லது

(இ) ஆய்வு, பரிசோதனை அல்லது நுண்ணாய்வு பற்றிய வெளிப்படுத்துகை செய்யப்பட்டதிலிருந்து, கப்பலின் நிலைமைக்கு அல்லது அதன் சாதனங்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டுள்ளது அல்லது வேறுவகையில் அது போதியதற்றதாகவுள்ளது,

என நம்புவதற்கு அவருக்குக் காரணமுள்ளவிடத்து, இல்லாதாக்கலாம் அல்லது இடைநிறுத்தலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும், வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, சான்றிதழை மீளவழங்குவதற்குமுன்னர் அல்லது அதற்குப் பதிலாகப் புதிய ஒன்றை அளிப்பதற்கு முன்னர் கப்பலை மீண்டும் ஆய்வுசெய்விக்கும் படியும், பரிசோதனை செய்விக்கும்படியும் அல்லது நுண்ணாய்வுசெய்விக்கும்படியும் மற்றும் ஆய்வு, பரிசோதனை அல்லது நுண்ணாய்வு பற்றிய மேலதிக வெளிப்படுத்துகையைப் பெற்றுக்கொள்ளும்படியும் சொந்தக்காரரைத் தேவைப்படுத்தலாம்.

இல்லாதாக்குகை அல்லது இடை நிறுத்துகை பற்றிய தகவல்.

215ஓ. வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, சான்றிதழானது இல்லாதாக்கப் பட்டுள்ளது அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளது எனக் கப்பலின் சொந்தக்காரருக்கு, கப்பற்றலை வருக்கு அல்லது முகவருக்கு அறிவித்தல் வேண்டும்.

இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட சான்றிதழை ஏற்றங்கீகரித்தல்.

215ஔ. (1) கப்பலின் நிலைமையும் அதன் சாதனங்களும் நல்லொழுங்கில் உள்ளன என்ற பொருள்பட, சமவாயம் எந்த நாட்டுக்கு ஏற்புடைய தாகின்றதோ அந்த நாட்டின் அதிகாரத்தின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழொன்று வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதியி னால் ஏற்றுக்கொள்ளப்படுதலும், சமவாயத்தினால் மேவப்பட்ட எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகைய நாட்டினால் வழங்கப்பட்ட சான்றித ழொன்றென்றாற்போன்று அதே செல்லுபடியாந் தன்மையைக் கொண்டுள்ளதாகக் கொள்ளப்படுத லும் வேண்டும்.

(2) ஒவ்வொரு கப்பலும், இலங்கையின் நியாயாதிக்கத்தின்கீழ் உள்ள துறைமுகங்களில் அல்லது கரைகடந்த முடிவிடங்களில் இருக்கையில், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழை வைத்திருப்பதற்குத் தேவைப்படுத்தப் படுதல் வேண்டும்.

(3) கப்பலானது செல்லுபடியான சான்றிதழைக் கொண்டுசெல்லாதவிடத்து, வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, கப்பலானது கடல்சார் சூழலுக்கு நியாயமற்ற தீங்கு விளைவிப்ப தற்கான அச்சுறுத்தலை முன்வைக்காமல் கடலுக்குச் செல்லக்கூடியவரை அது கடலுக்குச் செல்லாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான அத்தகைய நடபடிகளை எடுத்தல் வேண்டும்:

ஆயின், வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, கிடைக்கக்கூடிய மிகக்கிட்டிய தோதான பழுதுபார்த்தற் சாலைக்குச் செல்லும் நோக்கத்துக்காகத் துறைமுகத்தை அல்லது கரைகடந்த முடிவிடத்தை விட்டுச் செல்வதற்கான அனுமதியை அத்தகைய கப்பலுக்கு வழங்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 321அ, 321ஆ மற்றும் 321இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**27**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 321ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இவை, அச்சட்டவாக்கத்தின் 321அ, 321ஆ மற்றும் 321இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"நடைமுறைப் படுத்தப் படுகின்ற நியமங்கள்.

321அ. (1) வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்து வதற்காகத் தேவைப்படக்கூடியவாறாக, இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட ஏதேனும் சமவாயத்தின் அல்லது வரைவாவணத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுடன் இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்தல் நியமங்களை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆட்கள் தொடர்பில் எவையேனும் நடைமுறைப்படுத்தல் நியமங்கள் வழங்கப்படுகின்றனவோ அந்த ஆட்கள் எல்லோரும் அவற்றுடன் இணங்கியொழுகுவது அவர்களின் கடமையாதல் வேண்டும்.

ஒரு தண்டத்தை விதித்தல்.

321ஆ. (1) வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, எவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு, விதிக்கு, கட்டளைக்கு அல்லது பணிப்புக்கு முரணாகச் செயலாற்றியுள்ளாரென நம்புவதற்குப் போதிய சான்றைக் கொண்டுள்ளவிடத்து, அவர்–

(அ) இச்சட்டத்தின் 321ஈ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழாத்தின் விதப்புரையின்மீதும்; அத்துடன்

(ஆ) முதலாவது தவறாளரின் விடயத்தில், தவறானது எச்சூழ்நிலைகளில் புரியப்பட்டதோ அச்சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டும்,

தண்டமொன்றை விதிப்பது தோதானதாக விருப்பின், ஓர் அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒருமாதகாலப்பகுதியினுள் தோன்றி அவருக்குத் தண்டமொன்று ஏன் விதிக்கப்படுதலாகாதெனக் காரணங்காட்டும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துகின்ற அத்தகைய அறிவித்தல், ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படும் படிவமொன்றில் அவருக்குச் சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்விக்கலாம்.

(2) எவ்வாளுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அவ்வாள், அத்தகைய அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒருமாதகாலப்

பகுதியினுள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு, விதிக்கு, கட்டளைக்கு அல்லது பணிப்புக்கு முரணாகச் செயலாற்றினாரென அவர் ஒப்புக்கொள்ளுமிடத்து, வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய ஆள் ஒரு நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படின், இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படக்கூடிய எந்த அதிகபட்சக் குற்றப்பணத்துக்கு அவர் ஆளாக விருப்பாரோ அந்த அதிகபட்சக் குற்றப்பணத்தின் மூன்றிலொன்றை விஞ்சாத பணவகையான தண்டத்தை அவ்வாளுக்கு விதித்தல் வேண்டும்.

(3) (அ) எந்த ஆளுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப் படுகின்றதோ அந்த ஆள், அத்தகைய அறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து ஒருமாத காலப்பகுதியினுள் தோன்றி, தண்ட விதிப்புக்கெதிராகக் காட்டுவதற்குத் தனக்குக் காரணமுண்டெனக் கூறுமிடத்து, வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, விதித்துரைக்கப்பட்ட அக்கருமத்தைக் கேட்டு முடிபு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(ஆ) வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, கொடுக்கப்பட்ட காரணங்களுடன் திருப்தியடையாதவிடத்து, அவர் அதற்கான காரணங்களைக் குறித்தளித்தபின்னர் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தண்டத்தை விதிக்கலாம்.

(4) வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தினது ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் மீறுகைக்காக இப்பிரிவின்கீழ் எவரேனுமாளுக்குப் பணவகையான தண்டமொன்றை விதிக்குமிடத்து,

ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான முடிபு அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படுவதனை அவர் செய்வித்தல் வேண்டும்.

(5) வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் (இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அமைச்சுச் செயலாளருக்கு, (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட அத்தகைய முடிபு பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களைக்கொண்ட காலப்பகுதியினுள் மேன்முறையீடு செய்யலாம்.

(6) செயலாளரானவர், வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபையும் தவறு எச்சூழ்நிலைகளில் புரியப்பட்டதோ அச்சூழ்நிலைகளையும் கவனத்துட்கொண்டு அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது முடிபொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன், ஒன்றில்–

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபை அனுமதிக்கலாம், மாற்றலாம் அல்லது வேறுபடுத்தலாம்; அத்துடன் அதற்கிணங்கச் செயலாற்றும்படி வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) மேன்முறையீட்டின்கண் கூறப்பட்ட காரணங்களுக்காக அதற்கு அனுமதி மறுக்கலாம்.

(7) வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, செயலாளரினால் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு, அத்தகைய பணிப்பு வழங்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களைக்கொண்ட காலப்பகுதியினுள் இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன் செயலாளரின் பணிப்பை, அவரது முடிபினால் இன்னலுற்ற ஆளுக்கு அறிவித்தலும் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழான ஒவ்வோர் அறிவித்தலும் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படின் அல்லது கடைசியாக அறியப்பட்ட வாழிடத்தில் வெளிக்காட்டிவைக்கப்படின், அது அவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(9) இச்சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், சார்த்தப்பட்ட தவறாளர் அத்தகைய தவறைத் தாம் புரிந்தாரென ஒப்புக்கொண்டு அத்தகைய தண்டத்தைச் செலுத்தியுள்ளவிடத்து, அதே தவறு தொடர்பாகத் துடர்ச்சி அல்லது குற்றவழக்கெதுவும் ஏதேனும் நீதிமன்றத்தில் அமைவதாதலாகாது.

(10) செயலாளரின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், சட்டப் பிரச்சினைமீது, அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

தண்டத்தை அறவிடுதல்.

321இ. (1) பிரிவு 321ஆ என்பதன் (4) ஆம் அல்லது (10) ஆம் உட்பிரிவுகளின்கீழ் ஆக்கப்பட்ட முடிபிலிருந்து ஒருமாதம் கழிந்ததன்மேல் அத்தகைய முடிபு எவ்வாள் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அவ்வாள் தண்டக் கொடுப்பனவில் தவணை தவறுமிடத்து, வணிகக்

கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவொரு படிவத்தில், மீறுகையானது எப்பிரிவில் ஏற்பட்டதோ அப்பிரிவில் நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவானுக்கு, அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலினதும் முடிபினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன்சேர்த்து, வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) நீதிவான், அதன்மேல், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தண்டக் கொடுப்பனவில் தவணைதவறுகின்ற அத்தகைய ஆளை, இச்சட்டத்தின்கீழ் வருமதியான பணத்தொகையை அறவிடுவதற்கு அவருக்கெதிராக மேற்கொண்ட வழக்குநடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படலாகாதெனக் காரணங்காட்டுவதற்கு தம்முன்னர் கட்டளைவிட்டழைத்தல் வேண்டுமென்பதுடன் போதிய காரணம் காட்டுவதில் தவறுகை புரியப்பட்டால், மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்காக அத்தகைய ஆளுக்கு நீதிவானின் தண்டனைத்தீர்ப்பினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாக அத்தகைய பணத்தொகை கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகையவொரு தவறுக்காக விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணத்தைச் செலுத்துவதிலான தவறுகை தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் (அதன் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஈ) மற்றும் (ஐ) என்னும் பந்திகள்தவிர) அதன்மேல் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானானவர், அத்தகைய தண்டனைத்தீர்ப்பை விதித்த நேரத்தில் அவர் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின்மூலம் எந்தப் பணிப்பை விடுத்திருக்கக்கூடுமோ அந்த ஏதேனும் பணிப்பையும் விடுக்கலாம்.

நிபுணர்கள் குழாம்.

321ஈ. (1) கடல்சார் செலவு, கடல்சார் பொறியியல், நிருவாகம், சட்டம் அல்லது கணக்கியல் என்ற துறைகளில் அறிவும் அனுபவமும் வாய்ந்த ஐந்து ஆட்களைக் கொண்டுள்ள நிபுணர்கள் குழாமொன்று செயலாளரின் கலந்தாலோசனையுடன் வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி எந்தச் சூழ்நிலைகளின் கீழ் எவரேனுமாளுக்குப் பணவகையான தண்டத்தை விதித்தல் வேண்டுமோ அச்சூழ்நிலைகள்பற்றி அவருக்கு விதப்புரைகளைச் செய்தல் அத்தகைய நிபுணர்கள் குழாத்தின் பணியாதல் வேண்டும்.

(3) நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தாம் தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய ஊதியத்தைக் குழாத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்துதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 323அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 323 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 323அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

“விலக்களிப்புத் தத்துவம்.

323அ. வணிகக் கப்பற்றொழிற் பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தில் அடங்கியுள்ள அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்படும் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிலிருந்து அத்தகைய கப்பலுக்கு அல்லது வகுப்பினதான அல்லது விவரணத்தினதான கப்பலுக்கு விலக்களித்தல் இயைபான சமவாயத்தின் நோக்கெல்லையினுள் அடங்குகின்றதென அவர் திருப்திப்படின், அத்தகைய கப்பலுக்கு விலக்களிக்கலாம்.”.

**29**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 330 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவது இடப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 330 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"சர்வதேச சமவாயங்களின் ஏற்புடைமை. 330. இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அதற்கான வேறு ஏற்பாடு செய்யப்படும் வரை,-

(அ) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின், 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின் மற்றும் அத்தகைய வரைவாவணத்திற்கு செய்யப்படும் ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தத்தின் ஏற்பாடுகள் 139 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாகப் பயனுறுதல் வேண்டுமென்பதுடன், இலங்கையின் சூழ்நிலைகளுக்கு அவற்றை இசைவாக்குவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய திரிபுடன் பயனுறுதலும் வேண்டும்; அத்துடன் "நிருவாகம்" என்பதற்கான அதன் கண்ணுள்ள ஏதேனும் குறிப்பீடு, வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கான அல்லது அத்தகைய நோக்கங்களுக்காக வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி நியமிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு ஆளுக்கான அல்லது அலுவலருக்கான குறிப்பீடொன்றாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையும், 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தினால் திரிபுபடுத்தப்பட்ட

வாறானவையுமான 1966 ஆம் ஆண்டின் சுமைவரைகள்மீதான சர்வதேசச் சமவாயத்தின் ஏற்பாடுகள், மற்றும் அத்தகைய வரைவாவணத்திற்கு செய்யப்படும் ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தம் இச்சட்டத்தின் பாகம் VI இன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாகப் பயனுறுதல் வேண்டுமென்பதுடன், இலங்கையின் சூழ்நிலைகளுக்கு அவற்றை இசைவாக்குவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய திரிபுடன் பயனுறுதலும் வேண்டும்;

(இ) 1969 ஆம் ஆண்டின் கப்பல்களின் சரக்கெடையளவீடுமீதான சர்வதேசச் சமவாயத்தின் ஏற்பாடுகள், 44 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாகப் பயனுறுதல் வேண்டுமென்பதுடன், இலங்கையின் சூழ்நிலைகளுக்கு அவற்றை இசைவாக்குவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய திரிபுடன் பயனுறுதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட வாறானவையும் 1978 ஆம் ஆண்டின் வரைவாவணம் மூலமும் 1997 ஆம் ஆண்டின் வரைவாவணம்மூலமும் திரிபுபடுத்தப்பட்டவாறானவையுமான 1973 ஆம் ஆண்டின் கப்பல்களிலிருந்தான தீழ்ப்பைத் தடுப்பதற்கான சர்வதேசச் சமவாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் அத்தகைய வரைவாவணத்திற்கு செய்யப்படும் ஏதேனும் அடுத்துப் பின்னரான திருத்தத்தின் ஏற்பாடுகள் 215ஆ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட

ஒழுங்குவிதிகளாகப் பயனுறுதல் வேண்டுமென்பதுடன், இலங்கையின் சூழ்நிலைகளுக்கு அவற்றை இசைவாக்குவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய திரிபுடன் பயனுறுதலும் வேண்டும்.".

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 138ஆம், 159ஆம் பிரிவுகளில் "சமவாயம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணம் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வலுவிலுள்ளதும் நீக்கப்பட்ட சமவாயங்கள் தொடர்பாக ஆக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அத்தகைய ஒழுங்குவிதி இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாகவிராத அளவுக்கு, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். பேணல்கள்.

**31.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.